# சமயங்களின் ஒற்றுமைத் திருத்தலம் - பழமுதிர்ச்சோலை

**ஆ.சித்ராதேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21

**முன்னுரை**

முருகப்பெருமானின் ஆறாவது படை வீடாகப் போற்றப்பட்டு வருவது பழமுதிர்ச் சோலையாகும். இப்படைவீடு, மதுரைக்கு வடக்கே 12 மைலிலுள்ள கள்ளழகர் கோவில் உள்ளது. ஆழகர்கோவில் திருமாலிருஞ்சோலை என்றழைக்கப்படும். அங்கு பழமுதிர்சோலையின் மலைக்கிழவோனக முருகப்பெருமான் விளங்குகிறார். சோலைமலை திருமாஞ்சோலை மலை திருமாலிருங்குன்றம் என்றும் வேறுபெயர்களும் இந்த மலைக்கு உண்டு.

முருகன் ஒளவைப்பாட்டிக்கு அறிவுரை கூறிய இடம் என்பார்கள் 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று தமிழ்ப்புலமை பெற்ற அவ்வையிடம் வாதிட்ட இடம்தான் பழமுதிர்சோலை. அங்கு. சென்று முருகப்பெருமானை வழிபட்டு வந்தால் அறிவாற்றல் பெருகும். முருகப்பெருமானைக் கைகூப்பித் தொழுதால் நலம் யாவும் வந்துசேரும்.

**பழமுதிர்சோலை**

பழமுதிர்சோலை மிகவும் அரிய திருத்தலம் ஆகும். இங்குள்ள சுனை "நுபுரகங்கை"1(திருப்.ப.352) எனப்படும். பழமுதிர்ச்சோலையில் மிகவும் பெருமை வாய்ந்த இந்த நூர்புர கங்கையைச் சிலம்பாறு என்று அழைப்பர். இதனை,

"சிலம்பாறு பாயும் திருமாலிருஞ்சோலை"2

(ஒன்பதாம் திருமுறை .பா.எ. 1836)

என்ற பெரியரிழ்வாரின் பாசுரத்தின் வாயிலாகப் படித்தறிய இயலுகிறது. மேலும், திருமுருகாற்றுப்படையில் நக்கீரர். பழமுதிர் சோலையைப் புகழ்ந்து பாடியுள்ளார் .குறிப்பாக, பழமுதிர்சோலை முருகப்பெருமானை,''மலைக்கிழவோனே'' (திருமுருகு. பா. 317) என்று போற்றியள்ளார்.

**அருணகிரிநாதரும் பழமுதிர்சோலையும்**

அருணகிரிநாதர் திருப்புகழில் பழமுதிர்சோலை முருகனைப் புகழ்ந்து 16 பாடல்கள் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும், ''சோலைமலை நின்ற பெருமாளே''4 என்றும் ''சோலைமலையுற்ற பெருமாளே''5 ''திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசைமேவு பெருமாளே''6 என்றும்,''ஆதிச்சோலை மலைப்பதியிற்திகழ் பெருமாளே''7 என்றும் புகழ்ந்து பாடியுள்ளார். (திருப் பா.எண் 1-2-3-13)

**முதற்பாடல்**

பழமுதிர்ச்சோலை முருகனைப் புகழ்ந்து பாடப்பட்ட முதல் திருப்புகழ்ப் பாடல் 'வாதினையடர்ந்த' என்று தொடங்குகிறது. இப்பாடலில்

''நாதமொடு விந்துவான உடல் கொண்டு

நானிலம் அலைந்து திரிவேனோ

நாகமணிகின்ற நாதநிலை கண்டு

நாடியதில் நின்று தொழுவேனே''8 (திருப் பா.1)

என்ற பாடல் வரிகள் மூலம் நாதவிந்துக்களான இவ்வுடம்பைவிடாது கொண்டு குறிஞ்சி முல்லை மருதம், நெய்தல் என்று சொல்லப்படும் நான்கு வகையான நிலத்தில் அலைந்து திரிகின்றேன் என்கிறார் அருணகிரிநாதர். இவ்வாறு அருணகிரிநாதர் நான்கு நிலங்களிலும் தேடி அலைந்து முருகனை நாடிச்சென்று தொழுதமையை இப்பாடலின்வழி அறியமுடிகிறது.

**வாகையோடு சென்றமலை**

அருணகிரிநாதர் பழமுதிர்சோலை திருப்புகழ்ப்பாடலில் முருகப்பெருமான் வாகையொடு சென்று நின்ற மலை என்று புகழ்ந்து பாடியுள்ளார். இதனை

''சூரர் குலம் வென்று வாகையொடு சென்று

சோலை மலை நின்ற பெருமாளே''9 (திருப் பா .1)

என்ற பாடல் மூலம் படித்தறிய இயலுகிறது.

**பழமுதிர் சோலையின் ஆறாவது ஆதாரம்**

பழமுதிர்சோலை ஆறாவது படைவீடு 'ஆஞ்ஞை' என்பது ஆறாவது ஆதாரம் ஆகும்.''புரவ நடுவே நிலப்பறையேன்ற வடிவத்துடன் 'ய' கரத்தை இடமாகக் கொண்டுடது''10 பழமுதிர்சோலை முருகபெருமான் அறுபடைத் திருத்தலங்களில் வீற்றிருக்கிறார்.அதனால் 'ஆறு திருப்பதியில் வளர் பெருமாளே''11 என்று முருகப்பெருமானை அருணகிரிநாதர் போற்றிப் பாடியுள்ளார். (திருப் பா.1-2)

**சித்திரத்தில் களிமயில்**

சூரபன்மன் மாமரமாக வடிவெடுத்து கடல் நடுவே நின்றான். அவனை வேலாயுதத்தால் இரு கூறாகப்பிளந்தார் முருகப்பெருமான். ஒரு கூறை மயிலாகவும் மற்றொரு கூறை சேவலாகவும் மாற்றி மறக்கருணையால் ஆட்கொண்டார். அன்று முதல் முருகப்பெருமானுக்கு மயில் வாகனமாகவும் சேவல் கொடியாகவும் விளங்குகின்றன ஆனால் 'தலை மயிர் கொக்கொக்க நரைத்து' என்று தொடங்கும் பாடலில் அருணகிரிநாதர். (திருப்.பா.எண் 15)

''களிமயில் சித்திரத்தில் நடத்திப் பொருகோவே12 (திருப்.பா.எண்15) என்று பாடியுள்ளார். என்ற பாடல்வரியின் மூலமாக சூரபன்மனுடன் போர் புரியும்போதே முருகன் மயிலில் ஆரோகணித்திருந்தார் என்பது புலனாகிறது.

**ஆறாம்படைவீடு மாறிவிட்டது**

பழமுதிர்ச்சோலை முன்பு இருந்த நிலை வேறு இன்று அது காலத்தால் மாறிவிட்டது.குறிப்பாக ''முருகு என்றால் அழகு என்பது தானே பொருள் அழகர் எனினும் முருகர் எனினும் அது ஒரே பொருளாகக் குறித்து நிற்கும். இப்போது அழகர் கோவில் திருமால் கோவிலாக விளங்குகிறது .பண்டைக் காலத்தில் பலபத்ரன் கோயிலும் திருமால் கோயிலும் முருகவேள் கோயிலும் இருந்தன. பிறகு கால வேற்றுமையால் மறைந்தும் மாறியும் விட்டன''13 என்கிறார் வாரியார் சுவாமிகள். (திருப்.ப.359)

**முருகனின் அடியார்கள்**

திருமுருகாற்றுப்படையில் வரும் பழமுதிர்சோலை என்பதற்கு பழம் முற்றிய சோலை என்று நச்சினார்க்கினியார் உரை கூறியருள்கிறார். புராண வரலாறுகளிலும் இலக்கியங்களிலும் பழமுதிர்ச்சோலை தலம் முருகன்தலம் என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை.

கந்தபுராணத்துதிப்பாடலில் கச்சியப்ப சிவாச்சாரியார் வள்ளியம்மையைத் திருமணம் புரிய விநாயகரை யானையாக வந்து உதவும்படி முருகப்பெருமான் அழைத்த தலம் பழமுதிர்சோலை என கூறுகிறார்கள். எனவே ஆறுபடை வீடாகிய பழமுதிர்சோலை வள்ளி மலையைக் குறிக்கும என்று ஒருசாரர் தெரிவிக்கின்றனர். ஆனால் அருணகிரிநாதர் திருப்புகழில் வள்ளி மலையையும் பழமுதிர்ச்சோலையையும் தனித்தனியே பாடியிருக்கிறார். மேலும் பழமுதிர்சோலையில் இன்றும் காணப்படுகின்ற ‘‘நூர்புர கங்கை’’ என்னும் சிலம்பாற்றை பழமுதிர்சோலைத் திருப்புகழில் குறிப்பிட்டுப்பாடியுள்ளார்.

**சைவ வைணவ ஒற்றுமை**

அழகர்கோவில் அடிவாரத்தில் உள்ள சுந்தரராசப்பெருமாள் நின்றகோலத்தில் அருள்பாலிக்கிறார். அழகர் கோயிலில் உள்ள மூலவருக்கு கள்ளழகர் என்பது திருநாமம். மலையலங்காரன் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இங்கே கோயில் கொண்டுள்ள பெருமாளுக்கு சனிக்கிழமைகளில் விசேஷ நானல்ல. ஸ்ரீ முருகப்பெருமாளுக்கு உகந்த வெள்ளிக்கிழமையே விசேஷ நாளாகும் பூவாங்கி சாத்தப்படுகிறது. அன்று தேனும் தினை மாவும் நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது. தவிர பெரும்பாலும் அர்ச்சனைக்கு அரளி பூவாங்கி சாற்றப்படுகிறது. மற்ற விஷ்ணு ஆலயங்களைப் போல் பக்தர்களுக்கு துளசி வினியோகிப்பது கிடையாது. கோயில் மூலஸ்தானத்ததிலேயே சோலை மலைக்குமரன் எனும் வெள்ளி விக்ரகம் இருப்பது போல் பஞ்சலோகத்தில் சக்கரத்தாழ்வார் மூலவரைப் போன்று உற்சவ விக்ரகமும் இருந்து. இத்திருத்தலம் ஒற்றுமையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளுது.

**மயிலாக வந்தான் இந்திரன்**

‘‘சூரபன்மன் சக்ரவாகப்பறவை உருவெடுத்துப் போர்புரிய வந்தபோது இந்திரன் மயிலாக வந்து முருகவேளைத் தாங்கினான். அது மட்டுமல்லாமல் முருகவேளைத் தாங்கும்பேறு பெற்றோமே 14என்று மகிழ்ந்தான் இந்திரன். அதனால் அருணகிரிநாதர் ‘களிமயில் நடத்திய சித்திரத்தில் பொருகேளவே’ (திருப் ப.416)

என்று முருகப்பெருமானைப் போற்றி பாடினார் என்பதை உய்த்துணர இயலுகிறது. இந்நிகழ்வை கந்தபுராணத்தில்

‘‘பன்னிருநாட்டத் தண்ணல் படர்கிறை மயுரமாகி

முன்னுறு மகவான் தன்மேல் மொய்ம்புடன் புக்கு வைகி”15 ( கந்த. பா .7669 )

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகிறது.

**காதல் சோலை**

முருகப்பெருமான் உறையும் பழமுதிர்ச்சோலையைக் காதல் சோலை என்று அருணகிரிநாதர் போற்றியுள்ளார். பழமுதிர்ச்சோலையை முதன்மைப்படுத்தும் நோக்கில் அருணகிரிநாதர் பல திருத்தலங்களைச் சுட்டிக்காட்டியுள்ளதை

‘‘காசி ராமேசுவரம் ரத்நகிரி சர்ப்பகி
ஆருர் வேலூர் தேவுர் கச்சி மதுரைப் பறியல்
காவை மூதுரருணக் கிரிதிருத்தணியில் செந்தில் நாகை
நாவலூர் திருவேறணய்ப் பதியின் மிக்கதிகழ்
காதல் சோலைவளர் வெற்பிலற முத்தர் புகழ் தம்பிரானே”16 (கந்த பா.9)

என்ற பாடல் வரிகள மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

பழமுதிர்ச்சோலை ஆறாம் படைவீடு என்றும் அங்கு நூபுர கங்கை இருப்புது குறித்தும் அறிய முடிகிறது. அழகர் மலைதான் பழமுதிர்சோலை காதல்சோலை என்று கருதப்படுவதைத் திருப்புகழ்ப் பாடல் வாயிலாக நிறுவப்பெற்றுள்ளது மயிலாக வந்தான் இந்திரன் என்பதை வரலாறு கந்தபுராணப் பாடல் வாயிலாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

## பார்வை நூல்கள்

1) செங்கல்வராய பிள்ளை,( உ. ஆ)இ அருணகிரிநாதர் திருப்புகழ்,கழகம் வெளியீடு,சென்னை முதற்பதிப்பு-2011
2) செங்கல்வராய பிள்ளை ,(உ. . ஆ) திருவகுப்பு கழக வெளியீடு, சென்னை முதற்பதிப்பு- 2011
3) பூவண்ணன்,(உ. ஆ)கந்தபுராணம்-10 தொகுதிகள் வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
4) அருணாச்சலம், மு. தமிழ் இலக்கிய வரலாறு16 ஆம் நூற்றாண்டுதி.பார்க்கர் சென்னைஇ முதற்பதிப்பு -2005
5) கிருபானந்த வாரியார், ( உ. )இ கந்தர் அனுபூதி, குகஸ்ரீ வரியர் பதிப்பகம் சென்னை, மூன்றாம் பதிப்பு 2003.
6) ராமசுப்பிரமணியன், வ.த.இ பன்னிரு திருமுறைகள் (தொகுதி 7) வர்த்தமானன் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 2003.